முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

## மட்டம் 02 பரீட்சை – 2026 யூலை

# (2802) டிஜிடல் மாற்றமும் தகவல் முறைமைகளும்

(Digital Transformation & Information Systems)

2026-07-26
காலை
[08.45 – 12.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 09
வினாக்கள் : 07

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 01

*இல.* ***1.1*** *தொடக்கம்* ***1.10*** *வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** மனிதர்களைப் போலச் சிந்தித்துச் செயலாற்ற, நிரற்படுத்தப்பட்ட இயந்திரங்களில் மனித நுண்ணறிவை உருவகப்படுத்துவது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) கட்டச்சங்கிலி
(2) செயற்கை நுண்ணறிவு
(3) தரவு காட்சிப்படுத்தல்
(4) கூட்ட நிதியிடல்.

**1.2** பின்வருவனவற்றில் தகவல் முறைமைகளின் நெறிமுறைப் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கான ஒரு வழிமுறை யாது?

(1) வெளிப்படைத்தன்மை
(2) மேம்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள்
(3) வழக்கமான கணக்காய்வுகள்
(4) மேற்கூறிய யாவும்.

**1.3** நிகழ்நேரப் போக்குவரத்து மற்றும் காலநிலைத் தரவுகளைப் பயன்படுத்தி ஒரு தளவாட வழங்கல் (logistic) கம்பனி அதன் சாரதிகளுக்கு அதிக வினைத்திறன்மிக்க விநியோக மார்க்கங்களைப் பரிந்துரைப்பதற்கு பின்வரும் எந்த வகைப் பகுப்பாய்வைப் பயன்படுத்துகிறது?

(1) விளக்கப் பகுப்பாய்வு (Descriptive Analytics)

(2) கண்டறியும் பகுப்பாய்வு (Diagnostic Analytics)

(3) குறித்துரைக்கும் பகுப்பாய்வு (Prescriptive Analytics)

(4) முன்கணிப்புப் பகுப்பாய்வு (Predictive Analytics)

**1.4** பின்வருவனவற்றில் எது ஒரு பொது நோக்கு பிரயோக மென்பொருளுக்கும் ஒரு நிறுவன பிரயோக மென்பொருளுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைச் சரியாகக் காட்டுகிறது?

(1) பொது நோக்கு பிரயோக மென்பொருள் நிறுவனம் தழுவிய ஒருங்கிணைப்பை ஆதரிக்கின்ற அதே வேளை நிறுவன பிரயோக மென்பொருள் தனிநபர்களால் மாத்திரம் பயன்படுத்தப்படுகிறது.

(2) நிறுவன பிரயோக மென்பொருள் பெரிய அளவிலான நிறுவனச் செயன்முறைகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள அதே வேளை பொது நோக்கு பிரயோக மென்பொருள் சொல் செயலாக்கம் மற்றும் விரிதாள்கள் போன்ற பரந்தளவிலான பொதுவான பணிகளைச் செய்கிறது.

(3) பொது நோக்கு பிரயோக மென்பொருளை இணைய இணைப்பு உள்ள நிலையில் (online) மாத்திரமே பயன்படுத்த முடிவதுடன், நிறுவன பிரயோக மென்பொருள் இணைய இணைப்பு இல்லாத நிலையில் (offline) மாத்திரமே வேலை செய்கிறது.

(4) நிறுவன பிரயோக மென்பொருளுக்கு ஏனைய முறைமைகளுடனான ஒருங்கிணைப்பு தேவையில்லை என்பதுடன் பொது நோக்கு பிரயோக மென்பொருளுக்கு ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது.

**1.5** ஒரு நிதிக் கம்பனி, அதன் ஊழியர்களில் ஒருவர் கம்பனியின் நிதி முகாமையாளருக்குச் சொந்தமான உள்நுழைவு (login) விவரங்களைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக கணினி முறைமையை அணுகியதைக் கண்டறிந்துள்ளது. பின்வரும் எந்தச் சட்டத்தின் கீழ் அவர்கள் அந்த ஊழியர் மீது வழக்குத் தொடரலாம்?

(1) 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினிக் குற்றங்கள் சட்டம்.

(2) 2017 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலத்திரனியல் பரிவர்த்தனைகள் (திருத்தச்) சட்டம்

(3) 2024 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டம்

(4) 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலறியும் உரிமைச் சட்டம்.

1.6 வணிகச் செயன்முறை வெளிமூலமிடும் (BPO) சூழலில், பின்வருவனவற்றில் எது "ITES" என்பதைக் குறிக்கிறது?

(1) International Technology- enabled Economic Services

(2) Information Technology Enabled Services

(3) Integrated Technology and Engineering Support

(4) Information Transfer and Exchange Systems.

1.7 நிமாலுக்கு அவரது வங்கியிலிருந்து வந்தது போல் தோன்றும் ஒரு அவசர மின்னஞ்சல் வருகிறது. அதில் ஒரு தொடுப்பினைச் சொடுக்கி (click a link), தனது உள்நுழைவு (login) விவரங்களைச் சரிபார்க்குமாறு கேட்கப்பட்டது. பின்வரும் எந்த இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இந்தச் சூழ்நிலையில் விவரிக்கப்பட்டுள்ளது?

(1) Ransomware.
(2) Phishing.
(3) Denial of Service (DoS) Attack.
(4) Insider Threat.

1.8 வீட்டு முகவரி மற்றும் தொலைபேசி எண் போன்ற உணர்திறன்மிக்க தனிப்பட்ட தகவல்கள் இணையத்தில் கசிந்து, ஒரு தனிநபரைப் பின்தொடர்தல் மற்றும் உடல் ரீதியான தீங்குக்கு உள்ளாக்குகின்றது. இந்தச் சூழ்நிலையில் மோசமான தரவுத் தனியுரிமையின் விளைவை பின்வருவனவற்றில் எது சிறப்பாக பிரதிநிதித்துவப்படுத்துகிறது?

(1) அடையாளத் திருட்டு மற்றும் நிதி மோசடி

(2) தனிப்பட்ட பாதுகாப்பு இழப்பு மற்றும் பாதுகாப்பு இடர்கள்

(3) வரையறுக்கப்பட்ட டிஜிடல் சுதந்திரம் மற்றும் தனியுரிமை மீறல்கள்

(4) வணிகச் செயற்பாட்டு இடையூறு.

1.9 இலங்கைச் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் புரட்சிகரமான தொழினுட்பங்களையும் அத்தொழினுட்பங்களுக்கான உதாரணங்களையும் கவனத்திற் கொள்க:

| விவரம் | உதாரணம் |
|---|---|
| **(1)** மொபைல் கொடுப்பனவுத் தளங்கள் | **(a)** PickMe, HelaGo, Uber |
| **(2)** பயணங்களுக்காக வாகனங்களை அழைக்கும் தளங்கள் | **(b)** eZ Cash, mCash, Frimi |
| **(3)** இலத்திரனியல் வர்த்தக சந்தை இடங்கள் | **(c)** Daraz, Kapruka |

மேலுள்ள அட்டவணையில் இடது பக்கத்தில் தரப்பட்டுள்ள விவரங்களை வலது பக்கத்தில் தரப்பட்டுள்ள பொருத்தமான உதாரணங்களுடன் முறையே தொடர்புபடுத்துவது பின்வருவனவற்றில் எது?

(1) **(a), (b), (c).**
(2) **(a), (c), (b).**
(3) **(b), (a), (c).**
(4) **(c), (b), (a).**

**1.10** வேலைவாய்ப்பு மீதான தகவல் முறைமைகளின் பின்வரும் தாக்கங்களைக் கவனத்திற் கொள்க:

**(a)** கைமுறையாக மீண்டும் மீண்டும் செய்யப்படும் பணிகளுக்கு தன்னியக்கம் ஊடான பிரதியீடு.

**(b)** குறுகிய கால தன்னிச்சையான (freelance) வேலையை டிஜிடல் தளங்கள் ஊடாக வளர்த்தல்.

**(c)** உத்தரவாதமளிக்கப்பட்ட தொழில் பாதுகாப்பும் நீண்ட கால ஊழியர் நன்மைகளும்.

**(d)** தொலைதூர (remote) வேலைகளுக்கு அதிகரித்த வாய்ப்புகள்.

மேலுள்ளவற்றில், வேலைவாய்ப்பு மீதான தகவல் முறைமைகளின் சரியான தாக்கங்கள்:

(1) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்
(2) **(b)** யும் **(c)** யும் மாத்திரம்
(3) **(a)** யும் **(b)** யும் **(d)** யும் மாத்திரம்.
(4) மேற்கூறிய யாவும்.

(02 புள்ளிகள் வீதம், 20 புள்ளிகள்)

*இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவுசெய்யப்பட்ட விடையை (சரியானது / தவறானது) உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.11** திறன்பேசிகள் (Smartphones) மொபைல் செயலிகள் ஊடாக தொடர்பாடல் மற்றும் பொது நோக்குப் பணிகளை ஆதரிப்பதன் மூலம் எந்நேரத்திலும், எவ்விடத்திலும் உற்பத்தித்திறன் மேம்பாடுகளைச் சாத்தியமாக்குகின்றன.

**1.12** நிறுவன வளத் திட்டமிடல் (ERP) முறைமையானது நெகிழ்வுத்தன்மை மற்றும் துறைசார் கட்டுப்பாட்டை அதிகரிக்கும் பொருட்டு, ஒரு நிறுவனத்தினுள் உள்ள ஒவ்வொரு துறையும் தனித்தனித் தரவுத்தளங்களைப் பயன்படுத்தி சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்கிறது.

**1.13** இணையத் தாக்குதல்களைத் தடுப்பதற்கு, இணக்க வேலைச்சட்டகங்களுக்குத் தொடர்ச்சியான இடர் மதிப்பீடுகள் (risk assessments) தேவைப்படுகின்றன.

**1.14** உரிமையாண்மை அடிப்படையிலான கூட்ட நிதியிடல் (crowdfunding) ஆனது, பங்களிப்பாளர்கள் எந்தவொரு நிதிசார் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் சமூகக் காரணங்களுக்காக பணத்தை நன்கொடையாக வழங்குவதை அனுமதிக்கிறது.

**1.15** இலங்கையில் 2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டமானது நிகழ்நிலையில் தடைசெய்யப்பட்ட விடயங்களை பரப்புவதால் ஏற்படும் தீங்கிலிருந்து தனிநபர்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

(01 புள்ளி வீதம், 05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 02

**சுவ ஓசு பார்மசி** என்பது ஒரு சிறிய சில்லறை மருந்தகமாகும். இது தற்போது தினசரி விற்பனைகள், வழங்குநர்களின் ஓடர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் மருந்துச் சீட்டுகள் போன்றவற்றை புத்தகங்களில் கைமுறையாகப் பதிவு செய்கிறது. அடிக்கடி ஏற்படும் இருப்புப் பற்றாக்குறைகள், தாமதமான அறிக்கையிடல் மற்றும் வாடிக்கையாளர்களின் கொள்வனவு வரலாற்றைக் கண்காணிப்பதில் உள்ள சிரமம் ஆகியவற்றின் காரணமாக, மருந்தகத்தின் முகாமை ஒரு கணினிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையை அறிமுகப்படுத்தத் திட்டமிடுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஒரு புதிய முறைமையின் வெற்றிக்கு மிகவும் முக்கியமான தகவல் முறைமையின் இரண்டு (02) கூறுகளை(elements) **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(b) **சுவ ஓசு பார்மசியின்** ஒட்டுமொத்த செயலாற்றுகை மீது தகவல் முறைமை (IS) மற்றும் தகவல் தொழினுட்பவியல் (IT) ஆகியவற்றின் இரண்டு (02) தாக்கங்களை (impacts) **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(c) **சுவ ஓசு பார்மசியால்** பயன்படுத்தப்படும் தரமான தகவல்களின் (quality information) இரண்டு (02) பண்புகளைக் (characteristics) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

**சில்கி ஹேண்ட்லூம்** என்பது கண்டியைத் தளமாகக் கொண்ட ஒரு சிறிய இலங்கை ஆடை வணிகமாகும். இது தனது வாடிக்கையாளர்களின் ஓடர்கள், வழங்குநர்களின் விவரங்கள் மற்றும் நிதிசார்ந்த பதிவுகளை காகிதக் கோப்புகள் மற்றும் அடிப்படை விரிதாள்களைப் பயன்படுத்தி கைமுறையாக முகாமை செய்கிறது. உரிமையாளர் **ஜிஹான்** வணிகத் தரவுகளை முகாமை செய்வதற்காக, ஒரு முறையான தரவுத்தள முறைமையை நிறுவுவதன் மூலமும் அன்றாடச் செயற்பாடுகளை ஆதரிக்க ஒரு நம்பகமான இணைய இணைப்பைப் பெற்றுக் கொள்வதன் மூலமும் வணிகத்தை டிஜிடல்மயப்படுத்தத் தீர்மானித்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **சில்கி ஹேண்ட்லூம்** ஒரு தரவுத்தளத்தைத் தெரிவுசெய்யும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய மூன்று (03) பிரதான காரணிகளை (key factors) **விவரிக்க.** (06 புள்ளிகள்)

(b) இணைய சேவை வழங்குநரைத் (ISP) தெரிவு செய்யும்போது **ஜிஹான்** கவனத்திற் கொள்ள வேண்டிய இரண்டு (02) காரணிகளை **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

ஒரு பெரிய உற்பத்திக் கம்பனி புதிய தகவல் முறைமைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தனது செயற்பாடுகளை நவீனமயப்படுத்தத் திட்டமிடுகிறது. முகாமையானது தீர்மானமெடுத்தலை மேம்படுத்தவும் அதன் வணிகச் செயன்முறைகளை வெளிமூலமிடுவதற்கும் (outsource) விரும்புகிறது. மேலும் இக்கம்பனி சில முக்கியத்துவமற்ற நடவடிக்கைகளை வெளிமூலமிடத் (outsourcing) திட்டமிடுகின்ற அதே வேளை தரவுப் பகுப்பாய்வுகளைப் பயன்படுத்தி போட்டி நயத்தைப் பெறவும் திட்டமிடுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஒரு நிறைவேற்று தகவல் முறைமையின் (EIS) இரண்டு (02) பண்புகளையும் (characteristics), இயலுமைகளையும் (capabilities) **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(b) பல வேறுபட்ட வகைகளில் வருகின்ற இரண்டு (02) தரவுப் பகுப்பாய்வுக் கருவிகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) வணிகச் செயன்முறை வெளிமூலமிடலைப் (BPO) பயன்படுத்துகின்ற ஒரு கம்பனி பெற்றுக் கொள்ளும் நான்கு (04) அனுகூலங்களைக் (advantages) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

இலங்கையில் வேகமாக விரிவடைந்து வரும் ஒரு தனியார் சுகாதாரசேவை நிறுவனமான **MediTrust Hospitals** ஆனது, இலத்திரனியல் மருத்துவப் பதிவுகள், சந்திப்பு முன்பதிவுகளை அட்டவணைப்படுத்தல், ஆய்வக அறிக்கைகள் மற்றும் டிஜிடல் கொடுப்பனவு சேவைகளை முகாமை செய்வதற்கு ஓர் ஒருங்கிணைந்த நிகழ்நிலை நோயாளர் வலைத்தளத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. சுகாதாரசேவைச் செயற்பாடுகள் டிஜிடல்மயமாவது அதிகரித்துள்ள நிலையில், இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களிலிருந்து உணர்திறன்மிக்க தனிப்பட்ட மற்றும் மருத்துவத் தரவுகளைப் பாதுகாப்பது, தகவல் முறைமைகளுக்கு அதிகாரமளிக்கப்படாத அணுகலைத் தடுப்பது, உள்நாட்டு மற்றும் சர்வதேச தரவுப் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதை உறுதி செய்ய வேண்டியதன் அவசியம் ஆகியவை தொடர்பில் முகாமை கவலை கொண்டுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **MediTrust Hospitals** இற்கு தரவுத் தனியுரிமையின் நான்கு (04) முக்கியத்துவங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) **MediTrust Hospitals** இணையப் பாதுகாப்பு இடர்களைத் தணிப்பதற்கான தந்திரோபாயங்களாக நடைமுறைப்படுத்தக்கூடிய இரண்டு (02) தொழினுட்பக் கட்டுப்பாடுகளை **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(c) 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (PDPA) இரண்டு (02) பிரதான ஏற்பாடுகளைக் (key provisions) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**CeylonPay Solutions** என்பது கொழும்பைத் தளமாகக் கொண்ட ஒரு FinTech தொடக்கக் (startup) கம்பனியாகும். இது சமீபத்தில் மொபைல் கொடுப்பனவுத் தளமொன்றை அறிமுகப்படுத்தியது. இது பாரம்பரிய வங்கிச் சேவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அணுகலைக் கொண்ட கிராமப்புற மற்றும் அரை - நகர்ப்புற இலங்கையர்களைக் குறிவைக்கிறது. இக்கம்பனி தற்போது AI இனால் இயக்கப்படும் தன்னியக்க உரையாடல் செயலிக் (chatbot) கருவிகளைப் பயன்படுத்தி அதன் சேவைகளை விரிவுபடுத்தப் பார்க்கிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) இந்தப் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மொபைல் கொடுப்பனவு தளத்திலிருந்து **CeylonPay Solutions** பெற்றுக் கொள்ளக்கூடிய இரண்டு (02) நன்மைகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) **CeylonPay Solutions** வளர்ந்துவரும் தொழினுட்பவியல்களை பயன்படுத்துவதன் மூலம் எவ்வாறு போட்டி நயத்தைப் (competitive advantage) பெற்றுக் கொள்ளலாம் என்பதை இரண்டு (02) வழிகளில் **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(c) AI இனால் இயக்கப்படும் தன்னியக்க உரையாடல் செயலியைப் பயன்படுத்தி, சிறந்த மற்றும் மிகவும் துல்லியமான பதில்களை உருவாக்குவதற்கு **CeylonPay Solutions** இன் வாடிக்கையாளர்களால் பயன்படுத்தக்கூடிய நான்கு (04) உடனடிப் பொறியியல் நுட்பங்களைக் (prompt engineering techniques) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

**AgroLink (Pvt) Ltd.** என்பது இலங்கையில் வேகமாக விரிவடைந்துவரும் விவசாயத் தொழினுட்பவியல் கம்பனி ஆகும். இது கிராமப்புற விவசாயிகளை பல்பொருள் அங்காடிகள் மற்றும் நகர்ப்புற சில்லறை விற்பனையாளர்களுடன் டிஜிடல் வழங்கல் தளத்தின் (digital supply platform) ஊடாக நேரடியாக இணைக்கிறது. தற்போது கம்பனியின் பிராந்திய அலுவலகங்கள் ஏற்பாட்டியல் (logistics), நிதி (finance) மற்றும் பெறுகைத் (precurement) துறைகளுக்கிடையே கைமுறையான ஒருங்கிணைப்புடன் தனித்தனி முறைமைகளின் இயங்குகின்றன.

வணிக வளர்ச்சியின் காரணமாக, **AgroLink (Pvt) Ltd.** பின்வருவனவற்றைத் திட்டமிடுகிறது:

- ஒருமுகப்படுத்தப்பட்ட IT உட்கட்டமைப்பைத் தாபித்தல்
- அனைத்து முகாமைத்துவ மட்டங்களிலும் ஒருங்கிணைக்கப்பட்ட தகவல் முறைமைகளை நடைமுறைப்படுத்தல்

- விவசாயிகளின் பதிவுகள், ஓடர்கள், விலையிடல் மற்றும் விநியோக அட்டவணைகளை முகாமை செய்வதற்கு முகில் அடிப்படையிலான தரவுத்தளத்தைப் பின்பற்றுதல்
- தேவையை முன்னறிவித்தல் மற்றும் விலையிடல் தீர்மானங்களுக்காக நிகழ் நேர பகுப்பாய்வு பலகங்களை (real-time analytics dashboards) அறிமுகப்படுத்தல்
- தரவுப் பாதுகாப்பு நடைமுறைகளை வலுப்படுத்தல்
- IT பயன்பாட்டை அதிகரிப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்கத்தைக் குறைத்தல்

எவ்வாறாயினும், முகாமை பின்வருவன பற்றி கவலை கொண்டுள்ளது:

- விவசாயிகளினதும் சில்லறை விற்பனையாளர்களினதும் தகவல்களின் நெறிமுறைப் பயன்பாடு மற்றும் தரவுத் தனியுரிமை.
- சிறிய அளவிலான கிராமப்புற விவசாயிகளின் டிஜிடல் விலக்கு (digital exclusion).
- சேவையகங்கள் மற்றும் வலையமைப்பு உபகரணங்களினால் மின் நுகர்வு அதிகரித்து வருதல்
- படிமுறை (algorithm) சார்ந்த தீர்மானங்களில் அதிகப்படியாகச் சார்ந்திருத்தல்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **AgroLink (Pvt) Ltd.** அதன் ஒருமுகப்படுத்தப்பட்ட டிஜிடல் தளத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு விருத்தி செய்ய வேண்டிய அல்லது மேம்படுத்த வேண்டிய இரண்டு (02) பிரதான IT உட்கட்டமைப்புப் பகுதிகளை (key IT infrastructure components) ஒவ்வொன்றிற்கும் ஒரு உதாரணத்துடன் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) **AgroLink (Pvt) Ltd.** இன் ஒவ்வொரு முகாமை மட்டத்திலும் [செயற்பாடு (operational), உத்திசார்ந்த (tactical) மற்றும் தந்திரோபாய (strategy)] பயன்படுத்தப்படும் தகவல் முறைமைகளின் வகையையும் ஒவ்வொரு மட்டத்திலும் எடுக்கப்படும் தீர்மானத்தின் வகையையும் **அடையாளங் காண்க.** (06 புள்ளிகள்)

(c) டிஜிடல் உருமாற்ற முயற்சிகள் நிறுவனத்தின் வினைத்திறன் மற்றும் புத்தாக்கத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இரண்டு (02) வழிகளை (ways) **விவரிக்க.** (05 புள்ளிகள்)

(d) **AgroLink (Pvt) Ltd.** இல் தகவல் முறைமைகளைப் பயன்படுத்துவது தொடர்பான இரண்டு (02) நெறிமுறைச் சிக்கல்களை (ethical issues) **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(e) இலத்திரனியல் கழிவுகளைக் (e-waste) குறைக்கக்கூடிய மற்றும் IT உபகரணத்தின் ஆயுள் சுழற்சியை நீடிக்கும் மூன்று (03) நிலைபேறான நடைமுறைகளை (sustainable practices) **விவரிக்க.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் சரிபார்ப்பு அட்டவணை

| மட்டம் | செயல் வினைச்சொல் | வரைவிலக்கணம் | மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள் |
|---|---|---|---|
| **நினைவிற் கொள்ளல்**<br>உண்மைகள், பதங்கள், அடிப்படை எண்ணக் கருக்கள், அல்லது பதில்கள் எதைக் குறிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளும் தேவையின்றி அவற்றை நினைவிற் கொள்ளுதல் | அடையாளங் காண்க இனங்காண்க/ (Identify) | யாரையாவது அல்லது எதையாவது ஏற்பிசைவு செய்தல் | தலைப்பின் பிரதான பகுதிகளை கண்டுபிடித்து, பெயரிடுதல் |
| | வரையறுக்க (Define) | ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் கருத்து | ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் தெளிவான கருத்தை வழங்குதல் |
| | ஏற்பிசைவு செய்க (Recognize) | முன்பு பார்த்த ஒன்றைப் பற்றிய விழிப்புணர்வு | முந்தைய கற்றலில் இருந்து ஏதாவது ஒன்றைக் கண்டறிந்து ஏற்றுக் கொள்ளல் |
| | குறிப்பிடுக/ கூறுக (State) | தகவலின் தெளிவானதும் சுருக்கமானதுமான வெளிப்பாடு | பிரதான விடயங்கள் அல்லது எண்ணக்கருக்களை நேரடியான முறையில் வெளிப்படுத்தல் |
| | பட்டியலிடுக/ நிரற்படுத்துக. (List) | பெயர்கள், எண்கள், அல்லது உருப்படிகளின் தொடர் | பிரதான விடயங்களை ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் எழுதுதல் |
| | பதிவு செய்க (Record) | ஒரு முறைமையில் விவரங்களை உள்ளிடல் (கணக்கீடு அல்ல). | தொடர்புடைய விவரங்களை தெளிவாகவும் துல்லியமாகவும் உள்ளிடுதல் |
| **விளங்கிக் கொள்ளல்**<br>தகவல் சாதனங்களின் பொருளைப் புரிந்து கொள்ளுதலும் அதன் உட்பொருளை விளக்குவதற்கு அல்லது அதனை விபரிப்பதற்கு இயலுமாக இருத்தல் | கட்டியெழுப்புக (Construct) | கூறுகளை இணைப்பதன் மூலம் எதையாவது உருவாக்குதல் | வெவ்வேறு பகுதிகளைக் கொண்டு ஒரு முழுமையான கருத்துள்ளதாக ஆக்குதல் |
| | வேறுபடுத்துக (Differentiate) | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களுக்கு இடையேயான வேறுபாடுகளை ஏற்பிசைவு செய்தல் | எண்ணக்கருக்கள் அல்லது உருப்படிகளுக்கு இடையேயான வேறுபாடுகளை கோடிட்டுக் காட்டுதல் |
| | கலந்துரையாடுக / ஆராய்க (Discuss) | ஒரு தலைப்பைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களைக் கருதுதல் | பல்வேறு கண்ணோட்டங்களை ஆராய்ந்து நுண்ணறிவுகளை வழங்குதல் |
| | விவரிக்க (Explain) | எதையாவது பெரியளவில் விரிவாக தெளிவுபடுத்தல் | தர்க்கரீதியான மற்றும் விரிவான விளக்கங்களை வழங்குதல் |
| | எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க (Illustrate) | ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த உதாரணங்கள், விளக்கப்படங்கள், அல்லது காட்சிகளை பயன்படுத்தல் | பொருத்தமான உதாரணங்கள் அல்லது காட்சிகளுடன் விபரிப்புகளை ஆதரித்தல் |
| | உட்பொருளை விளக்குக (Interpret) | தகவல் அல்லது செயல்களின் அர்த்தத்தை விபரித்தல் | உங்கள் சொந்த மொழிநடையில் ஏதாவதொன்றின் பொருளை விபரித்தல் |
| | விளக்குக (Describe) | ஏதாவதொன்றின் விரிவான விளக்கம் | கட்டமைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய விவரங்களை வழங்குதல் |
| | பொழிப்பாக்குக (Summarise) | பிரதான விடயங்களின் சுருக்கமான கூற்று | பிரதான தகவல்களைச் சுருக்கமாக முன்வைத்தல் |
| **பிரயோகித்தல்**<br>கற்றுக்கொண்ட விடயத்தை புதிய மற்றும் உறுதியான சூழ்நிலைகளில் பயன்படுத்துதல். இதற்கு அறிவு மற்றும் திறன்களின் நடைமுறைப் பிரயோகம் தேவைப்படுகிறது.. | பிரயோகிக்க (Apply) | ஒரு சூழ்நிலையில் அறிவு, திறன்கள், அல்லது விதிகளைப் பயன்படுத்தல் | ஒரு முடிவை அடைய தொடர்புடைய அறிவு, அல்லது நுட்பங்களைப் பயன்படுத்தல் |
| | கணிக்க/ கணிப்பீடு செய்க (calculate) | கணித அல்லது தர்க்க முறைகள் ஊடாக பெறுமதியை தீர்மானித்தல் | ஒரு தீர்வை அடைய எண் அல்லது தர்க்கரீதியான செயன்முறைகளைப் பயன்படுத்தல் |
| | தீர்மானிக்க (Determine) | ஆய்வு அல்லது கணக்கீடு மூலம் ஏதாவதொன்றை நிறுவுதல் | கணக்கீடு அல்லது ஆய்வுக்காக ஏதாவதொன்றை கண்டுபிடித்தல் அல்லது முடிபு செய்தல் |
| | செயல் விளக்கமளிக்க (Demonstrate) | ஒரு செயன்முறை அல்லது முறையைக் காண்பித்தல் | கட்டமைக்கப்பட்ட படிமுறைகள் ஊடாக தெளிவான உதாரணத்தைக் காட்டுதல் |
| | தயாரிக்க (Prepare) | பயன்பாட்டிற்கான பொருள்கள் அல்லது தகவல்களை ஒழுங்கமைத்தல் | ஒரு பணியில் ஈடுபடுவதற்கு முன் தேவையான விவரங்களை வரிசைப்படுத்தல் |
| | பயன்படுத்துக (Use) | ஒரு நோக்கத்திற்காக எண்ணக்கரு, கருவி, அல்லது முறையைப் பிரயோகித்தல் | தொடர்புடைய அறிவு அல்லது வளங்களைப் பொருத்தமானவாறு நடைமுறைப்படுத்தல் |
| | முன்வைக்க (Present) | தகவல்களை பயனுறுதிமிக்க வகையில் பகிர்தல் | பிரதான நுண்ணறிவுகளை தெளிவாகவும் தொழில்முறை ரீதியாகவும் வழங்குதல் |
| **பகுப்பாய்வு**<br>தகவல்களின் கட்டமைப்பு மற்றும் தொடர்பை புரிந்து கொள்வதற்கு தகவல்களை கூறுகளாகப் பிரித்தல் | பகுப்பாய்வு செய்க (Analyse) | ஒரு பொருளை அதன் பாகங்களைப் புரிந்துகொள்ள விரிவாக ஆராய்தல் | சிறந்த புரிதலுக்காக தகவலை பிரதான பகுதிகளாகப் பிரித்தல் |
| | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகள் மற்றும் / அல்லது வேறுபாடுகளை ஆராய்தல் | பிரதான பொதுவான தன்மைகள் மற்றும் வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுதல் |
| | பிரித்தறிக (Distinguish) | தனித்துவமான பண்புகளை ஏற்பிசைவு செய்தல் | பொருள்களை ஒன்றிலிருந்தொன்று எது வேறுபடுத்துகிறது என்பதை அடையாளங் காணல் |
| | பரீட்சிக்க / சோதிக்க (Examine) | ஏதாவது ஒன்றின் தன்மையைத் தீர்மானிக்க அதனைப் பரிசோதித்தல் | ஏதாவது ஒன்றைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள அதைக் கூர்ந்து பார்த்தல் |
| | கோடிட்டுக் காட்டுக (Outline) | பிரதான விடயங்களின் பொழிப்பு | பிரதான அம்சங்களின் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கண்ணோட்டத்தை வழங்குதல் |
| | நடத்துக (Conduct) | ஒரு பரிசோதனை, கணக்கெடுப்பு, அல்லது ஆய்வுக்கான கூறுகளை ஒழுங்கமைத்தல் | ஒரு பணியை முறையாக முன்னெடுக்க கட்டமைக்கப்பட்ட படிமுறைகளைப் பின்பற்றுதல் |
| | அறிக்கையிடுக (Report) | கண்டறிதல்களின் கட்டமைக்கப்பட்ட முன்வைப்பு | பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்களை ஒரு தெளிவான மற்றும் தர்க்கரீதியான வடிவத்தில் முன்வைத்தல் |
| **மதிப்பீடு**<br>தேர்வு நிபந்தனை அல்லது நியமங்களின் அடிப்படை யில் யோசனைகள் அல்லது பொருள்களின் பெறுமதி அல்லது தரம் குறித்து தீர்ப்புகளை வழங்குதல் | ஆலோசனை வழங்குக (Advise) | யோசனைகள் அல்லது பரிந்துரைகளை வழங்குதல் | பகுப்பாய்வின் அடிப்படையில் தகவலறிந்த வழிகாட்டலை வழங்குதல் |
| | மதிப்பீடு செய்க (Evaluate) | பெறுமதி, பயனுறுதித்தன்மை, அல்லது தாக்கத்தின் விமர்சன ரீதியான மதிப்பீடு | தேர்வு நிபந்தனைகளின் அடிப்படையில் ஏதாவது ஒன்றின் தரம் அல்லது தொடர்பை மதிப்பிடுதல் |
| | அமைக்குக (Formulate) | ஒரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை அல்லது திட்டத்தின் அபிவிருத்தி | நன்கு வரையறுக்கப்பட்ட முறை அல்லது உபாயத்தை உருவாக்குதல் |
| | பரிந்துரை செய்க (Recommend) | பொருத்தமான செயல் திட்டம் பற்றி யோசனை முன்வைத்தல் | தர்க்கரீதியான பகுத்தறிவால் ஆதரிக்கப்படும் ஒரு அணுகுமுறையை முன்மொழிதல் |
| **உருவாக்குதல்**<br>ஒரு ஒத்திசைவான அல்லது செயற்பாட்டு முழுமையை உருவாக்க, புதுமையான வழிகளில் கூறுகளை இணைத்தல்; புதிய யோசனைகள், உற்பத்திகள், அல்லது புரிதல் வழிகளை உருவாக்கும் ஆற்றல் | உருவாக்குக (Create) | புதிதாக ஏதாவதொன்றை உருவாக்குதல் | அசலான மற்றும் நோக்கமுள்ள ஏதாவதொன்றை விருத்தி செய்தல் |
| | மதிப்பிடுக (Assess) | தரம், ஆற்றல், அல்லது தன்மை பற்றி மதிப்பீடு செய்தல் அல்லது மதிப்பிடுதல் | கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் நியாயமான தீர்ப்பை வழங்குதல் |
| | விருத்தி செய்க (Develop) | ஒரு யோசனை, பொருள், அல்லது எண்ணக் கருவின் விரிவாக்கம் அல்லது செம்மையாக்கம் | காலப்போக்கில் ஒரு யோசனையை வலுப்படுத்தி, மேம்படுத்துதல் |
| | முன்மொழிக (Propose) | கருத்திற் கொள்வதற்காக ஒரு திட்டத்தை அல்லது எண்ணக் கருவைப் பரிந்துரைத்தல் | ஒரு யோசனை அல்லது கட்டமைக்கப்பட்ட பரிந்துரையை முன்வைத்தல் |
| | இணைப்பாக்கம் செய்க (Synthesis) | ஒரு ஒத்திசைவான முழுமையை உருவாக்க பல்வேறு கூறுகளையும் ஒருங்கிணைத்தல் | பல யோசனைகள் அல்லது நுண்ணறிவுகளை ஒரு அர்த்தமுள்ள முடிவில் ஒருங்கிணைத்தல் |
| | வடிவமைக்குக (Design) | ஏதாவது ஒன்றிற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டத்தை உருவாக்குதல் | ஒரு பொருள் அல்லது செயன்முறைக்கு ஒரு விரிவான கட்டமைப்பை அமைத்தல் |
| | தொகுக்குக (Compile) | பல்வேறு மூலங்களில் இருந்து தகவல்களை ஒன்றுசேர்த்தல் | சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒரு விரிவான வடிவத்தில் ஒழுங்கமைத்தல் |